இவ்வினாத்தாளில் இரண்டு வினாக்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றுக்கு மட்டும் விடையளிக்கவும். இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும் வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும் கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்குப் பத்து நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம்.

வினா 1

## காணாமல் போன பணப்பை

அன்று உன் ஆசிரியர் மாணவர்களை ஐம்பது வெள்ளி கொண்டுவரச் சொல்லி இருந்தார். நீயும் எடுத்து வந்தாய். உடற்பயிற்சி வகுப்பு முடிந்து நீ வகுப்புக்கு வந்த போது உன் பணப்பையைக் காணவில்லை. உன் பணப்பை எப்படி காணாமல் போனது, உன் பணப்பை கிடைத்ததா என்பதைப் பற்றி 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுது.

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வினாக்களை நீ கட்டுரை எழுதுவதற்குத் துணையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

1. ஐம்பது வெள்ளியை ஆசிரியர் ஏன் கொண்டுவரச் சொன்னார் ?

2. நீ ஏன் பணப்பையை வகுப்பில் வைத்தாய் ?

3. எப்போது உன் பணப்பை தொலைந்துவிட்டது என்று அறிந்தாய் ?

4. யாரிடம் இதைப் பற்றி சொன்னாய் ?

5. இறுதில் என்ன ஆனது ?

MORE TESTPAPERS AVAILABLE AT TESTPAPERSFREE.COM

**PRIMARY SCHOOL**

**SEMESTRAL ASSESSMENT 1 - 2014**

**HIGHER MOTHER TONGUE – TAMIL**

**PRIMARY 6 HMT**

பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.**

நேற்று நாங்கள் தமிழ்ப்பாடம் படித்துக்கொண்டிருந்தோம். அப்போது, (Q1)திடிரென்று தீயறிவிப்பு மணி ஒலித்தது. உடனே (Q2)நாங்கள் தமிழாசிரியர் பொருள்களை எல்லாம் அப்படியே வைத்துவிட்டு வகுப்பறைக்கு வெளியே வரிசையில் நிற்கச் சொன்னார். நாங்கள் அவர் சொன்னபடி (Q3)செய்தேன். அவர் எங்களை ஒரு பள்ளித் திடலுக்கு அழைத்துச் சென்றார். அங்கே எல்லா வகுப்பு (Q4)மாணவர்கள் ஆசிரியர்களும் கூடியிருந்தார்கள்.

தலைமையாசிரியர் அங்கே வந்தார். அவர், எல்லா மாணவர்களும் இருக்கிறார்களா என்று சரிபார்க்கும்படி ஆசிரியர்களிடம் கூறினார். ஆசிரியர்கள் கணக்கிட்டு எல்லாரும் இருப்பதை உறுதிப்படுத்தினார்கள். அதைக் கேட்ட தலைமையாசிரியர், "நீங்கள் எல்லாரும் பதற்றமில்லாமல் வேகமாகச் (Q5)செயல்படுவீர்கள். அதனால், இந்தப் பயிற்சி வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது," என்று கூறி அனைவரையும் பாராட்டினார்.

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |

## வாக்கியங்களை முடித்தெழுதுதல் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொல்லை அல்லது சொற்களைக் கொண்டு முடித்துக் காட்டுக. அவ்வாறு முடிக்கப்பெறும் வாக்கியம் ஒவ்வொன்றும் அதற்கு முந்திய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும்.

Q6. இந்தியச் சமூகம், புதிய பிரதமரைப் பாராட்டிச் சிறப்பித்தது.

நமது புதிய பிரதமர் இந்திய சமூகத்தால் ______________________

______________________________________.

Q7. நாம் வாழ்க்கையில் முன்னேற கடுமையாக உழைக்க வேண்டும்.

நாம் கடுமையாக உழைத்தால்தான் ______________________

______________________________________.

Q8. திருக்குறள் மக்களுக்குப் பல நல்ல கருத்துக்களைக் கூறுகிறது.

திருக்குறள் மூலம் மக்கள் பல நல்ல ______________________

______________________________________.

Q9. கல்விச் செல்வம் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத செல்வமாகும்.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத ______________________

______________________________________.

*வேற்றுமை உருபு (' மதிப்பெண்கள்)*

அடைப்பிற்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக.

துறவி ஒருவரிடம் நீண்ட காலமாக சீடன் ஒருவன் உழைத்து வந்தான். ஒருநாள் துறவி சீடனை அழைத்து, "சீடனே! எனக்கு உன்னைப் பிடித்துள்ளது. (Q10)__________________ *( உன்)* ஏதேனும் புதிதாகக் கற்பிக்கலாம் என்று நினைக்கிறேன். அதனால், உனக்கு இறந்தவரை உயிர்ப்பிக்கும்

(Q11)__________________ *(மந்திரம்)* சொல்லித் தருகிறேன். ஆனால் நீ மந்திரத்தைக் கவனமாகப் பயன்படுத்த வேண்டும்," என்றார். அதற்குச் சீடன் சம்மதித்தான்.

மறுநாள் சீடன் (Q12)__________________ *(காடு)* விறகு பொறுக்கிவிட்டு குடிசைக்குத் திரும்பிக்கொண்டிருந்தான். அப்போது (Q13)__________________ *(ஓரிடம்)* நிறைய எலும்புகள் இருப்பதைக் கண்டான். சீடன் உடனே தான் துறவியிடமிருந்து கற்ற மந்திரத்தைச் சொன்னான். அந்த எலும்புகள் ஒன்று சேர்ந்து ஓர் ஓநாயாக மாறின. ஓநாய் அவன்மீது பாய்ந்து அவனைக் கொன்று தின்றது.

முன்னுணர்வுக் கருத்தறிதல் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.

ஒரு காட்டில் சில மான்கள் ஒன்றாக வாழ்ந்து வந்தன. மான்களின் தலைவன் தன் கூட்டத்தை ஆபத்தின்றிக் காப்பாற்றி வந்தது. ஒரு நாள், வேடன் ஒருவன் அக்காட்டிற்கு வேட்டையாட வந்தான். (Q14)______________________________. மாறாக, மரத்தின் உச்சியில் கிளைகளுக்கிடையே மறைந்திருந்து அம்பு எய்து தாக்குவான்.

அன்று மான்கள் மரத்துக்குச் சற்றுத் தொலைவில் கூட்டமாக நின்று கொண்டிருந்தன. (Q15)____________________________. அதைக் கண்ட சில மான்கள் அவற்றை உண்ணச் சென்றன. உடனே, மான்களின் தலைவன், "அந்தப் பழங்களை யாரும் உண்ணாதீர்கள். Q16____________________________," என்று கூறித் தடுத்தது. பிறகு மரத்தை உன்னிப்பாகக் கவனித்தது.

மரத்தின் உச்சியில் வேடன் மறைந்திருப்பதை மான்களின் தலைவன் கண்டது. அது மரத்தை நோக்கி, "மரமே! முன்பு பழங்களை நேராகக் கீழே எறிந்தாய். இன்று மட்டும் வித்தியாசமாகத் தூரத்தில் எறிகின்றாயே! (Q17)____________________________," என்று கூறிவிட்டு வேகமாகக் காட்டை நோக்கி ஓடியது. வேடன் மரத்தைவிட்டு இறங்கி அம்பு எய்வதற்குள் அவை காட்டிற்குள் ஓடி மறைந்தன.

(1) அதனால், அவன் கனிகளைப் பறித்து மான்கள் நிற்கும் இடத்திற்கு அருகில் எறிந்தான்.
(2) புதர்களில் ஒளிந்திருந்து தாக்குவதில் அவன் திறமைசாலி.
(3) அவை நமக்குச் சொந்தமானவை.
(4) அப்போது, வேடன் கிளைகளை அசைத்ததால் பழங்கள் மரத்தடியில் விழுந்தன.
(5) அதனால், இந்தக் கனிகள் எங்களுக்கு வேண்டாம்.
(6) மற்ற வேடர்களைப் போல் அவன் புதர்களில் மறைந்திருந்து வேட்டையாடுவதில்லை.
(7) இதில் மர்மம் ஒன்றும் இல்லை.
(8) அவற்றால் உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம்.

| வினா எண் | விடை |
|---|---|
| Q14 | |
| Q15 | |
| Q16 | |
| Q17 | |

## சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.

நிலவில் உலா வந்தவர்கள், எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியவர்கள் விடுதலைக்குப் போராடியவர்கள் ஆகிய அனைவருமே முயன்றால் முடியும் என்ற எண்ணத்தைத் தங்கள் உள்ளத்தில் கொணடவர்கள். **வையகத்தில்** முயற்சி செய்பவர்கள் தங்கள் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைகிறார்கள். முயற்சி இல்லாதவர்களோ தாழ்ந்து விடுகிறார்கள்.

ஒரு சாதனிஅயைப் புரிவதற்குத் தொடர் முயற்சிய்ம், ஆர்வமும், ஈடுபாடும் **இன்றியமையாதவை.** எந்தப் பெரிய சாதனையைச் செய்வதற்கும் அதை முதலில் தொடங்க வேண்டும். எந்தச் செயலையும் தொடங்குவதற்கு முன்பே அது சரிபட்டு வராது என நினைப்பதும், தாழ்வு மனப்பான்மை கொண்டு நம்மால் முடியாது என எண்ணுவதும், முயற்சி செய்யாமல் வெற்றி கிடைத்து விடும் என நம்புவதும் முயற்சிக்குத் தடையாக இருப்பவையாகும்.

நாம் வெற்றி பெற வேண்டுமெனில் இரண்டு வழிகளைக் கடைபிடிக்க வேண்டும். ஒன்று நம் முயற்சியில் உடனே செயல்படத் தொடங்க வேண்டும். அடுத்து நாம் தொடங்கிய முயற்சியிலிருந்து ஒருபொழுதும் பின்வாங்காமல் இருக்க வேண்டும். நாம் ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்னர், நம் மனதைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். அதோடு நம்முடைய செயல் உயர்ந்த நோக்கமுடையதாக இருப்பது அவசியம். அப்பொழுதுதான் நம்முடைய செயல் வெற்றி கண்டு நம்மால் வாழ்க்கையில் முன்னேற முடியும்.

ஒவ்வொரு மனைதனுக்கும் பல வாய்ப்புகள் அவனுடைய வீட்டுக்கதவைத் தட்டிக்கொண்டே இருக்கின்றன. அதைப் புரிந்து கொண்டு விழிப்புடன் இருப்பவர்கள் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். எந்தப் பெரிய சாதனையாளரும், வெற்றியாளரும் வாய்ப்புகள் கிடைக்கவில்லையே என்று எண்ணிக் கலங்கியது கிடையாது. கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு கடும் முயற்சியுடன் உழைத்து வெற்றி காண்கிறார்கள். ஆனால் சோம்பேறிகளோ இவ்வாறு செய்வதில்லை. ஆகையால், நாம் வாழ்க்கையில் வெற்றி நடை போட நமக்கு வழங்கப்படும் வாய்ப்புகளைத் தக்க சமயத்தில் பயன்படுத்திக் கொண்டு கடுமையாக உழைக்க வேண்டும்.

வினாக்கள் (22 ம.பெ)

Q18. முயற்சி இல்லாதோர் எந்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள் ? (2)

Q19. ஒரு சாதனையைப் புரிய ஒருவர் என்ன செய்யவேண்டும் ? (4)

Q20. எதனால் நம் முயற்சிகள் தடைப்படுகின்றன? (4)

Q21. நாம் மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியடைய என்னென்ன செய்ய வேண்டும் ? (5)

Q22. யார் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்? (3)

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

Q23. ஏன் சோம்பேறிகளுக்கு வெற்றி வாய்ப்புக் கிடைப்பதில்லை? (4)

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

Q24. <u>பொருள் எழுது</u> (4 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. வையகத்தில் - ____________________ (2)

ஆ. இன்றியமையாதவை - ____________________ (2)

# P6 HMT
# TESTPAPER 13

—

<u>நேற்று நாங்கள் தமிழ்ப்பாடம்..........</u>

1. திடீரென்று 2. எங்கள் 3. செய்தோம் 4. மாணவர்களும்
5. செயல்பட்டீர்கள்

6. பாராட்டிச் சிறப்பிக்கப்பட்டார்.

7. வாழ்க்கையில் முன்னேற முடியும்.

8. கருத்துக்களைக் கற்றுக்கொள்கின்றனர்.

9. செல்வம் கல்விச் செல்வமாகும்.

10. உனக்கு 11. மந்திரத்தை 12. காட்டிலிருந்து 13. ஓரிடத்தில்

14. 6 15. 1 16. 8 17. 5

18. முயற்சி இல்லாதோர் தாழ்ந்த் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

19. ஒரு சாதனையைப் புரிவதற்கு தொடர் முயற்சியும், ஆர்வமும், ஈடுபாடும் இன்றியமையாதவை என்பதோடு எந்தப் பெரிய சாதனையைச் செய்வதற்கும் அதை முதலில் தொடங்க வேண்டும்.

20. எந்தச் செலையும் தொடங்குவதற்கு முன்பே இது சரிப்பட்டு வராது என்று நினைப்பதாலும், தாழ்வு மனப்பான்மை கொண்டு நம்மால் முடியாது என எண்ணுவதாலும், முயற்சி செய்யாமல் வெற்றி கிடைத்துவிடும் என நம்புவதாலும் நம்முடைய முயற்சிகள் தடைப்படுகின்றன.

21. நம் முயற்சியில் உடனே செயல்படவேண்டும் என்பதோடு, நாம் தொடங்கிய முயற்சியிலிருந்து ஒருபொழுதும் பின்வாங்காமல் இருக்க வேண்டும். அதோடு நாம் ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்னர், நம் மனதை தயார் நிலையில் வைத்திருப்பதுடன் நம்முடைய செயல் உயர்ந்த நோக்கமுடையதாக இருக்க வேண்டும்.

22. வாய்ப்புகள் வீட்டுக்கதவைத் தட்டும்போது அதைப் புரிந்துகொண்டு விழிப்புடன் இருப்பவர்கள் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

23. கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு கடும் முயற்சியுடன் உழைத்து வெற்றி காணும் பெரிய சாதனையாளர்களைப்போல் சோம்பேறிகள் செயல்படாததால் அவர்களுக்கு வெற்றி வாய்ப்புகள் கிடைப்பதில்லை.

Q24. சொற்பொருள் (4 மதிப்பெண்கள்)

அ. உலகத்தில்
ஆ. முக்கியமானவை